கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்
www.newwisdomministries.com



ஞானம் 5 – ஒலி 21
22-05-2022



## புனித தேவசகாயம் அவர்களே...
## எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...

## தலையங்கம்



# ஆண்டவரே உமக்கு நிகர் யாருமிலர்.

– எரேமியா 10:6



அருட்பணி.சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான ஞான ஒலி என்னும் இணைய, ஒலி வடிவ வார இதழின் வாசக சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் என் என் அன்பான வணக்கங்கள். கடந்த ஐந்து ஆண்டுகள் மற்றும் இந்தாண்டின் 21 ம் வாரஇதழ்முடிய நீங்கள் எங்களுக்கு அளித்துவரும் ஆதரவுக்கு எங்களின் இதயப்பூர்வ நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஈகை குணமே ஈசனின் குணம்.

கொடுப்பவரின் உள்ளமோ மாணிக்கக் கோவில்.

அடுத்தவர் நலத்தை நினைப்பவர் தமக்கு ஆயுள் முழுவதும் சுப தினம்

என்று நாம் அறியாத ஒன்றல்ல. கொடை உள்ளம் யாருக்கும் சுலபமாக அமையாது. யார் இந்தப் பிரபஞ்ச ஞானத்தைப் பெற்றுள்ளார்களோ, சாதாரண மனித நிலையிலிருந்து எல்லோரையும் வாழ வைக்கும் தெய்வீக நிலைக்கு உயர்கின்றார்களோ அவர்களுக்கே அது அமையும்.

கொடுப்பவர்களால்தான் இவ்வுலகில் வறுமையிலும், இயலாமையிலும் பராரிகளாக வாழ்கின்றார்கள் நம்மையும் இறைவன் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையோடு வாழத் துணிகின்றார்கள்.

எந்தவித எதிர்பார்ப்புமின்றி பிறர் வாழ, எதையும் கொடுக்கும் குணமுடையோரே, அனாதைகளுக்கு தனது பெயரில் உதவுவதற்காக இறைவனால் அனுப்பப்பட்டவர்கள். இறைத் தூதுவர்கள்.

அவர்களால்தான் இன்றும் இந்த உலகத்தில் மழை பொழிகின்றது என்று எல்லோரும் சொல்கின்றோம்.

கொடுப்பதை நினைவில் கொள்ளாத உள்ளம் படைத்தவர்கள் அவர்கள்.

ஆகவேதான் தன் குழந்தைக்காக தன் அழகு, உடல் நலம், கட்டுடல், உறக்கம், சுகங்கள் அனைத்தையும் இழக்கத் தயங்காத பெண்மையின் தாய்மையை மனித குலமே போற்றிக் கொண்டாடுகின்றது.

திருவிவிலியத்தில் நீதிமொழிகள் 31ம் அதிகாரம் 31ம் வசனம் அனைத்திற்கும் மேலாக முத்தாய்ப்பாக பெண்ணின் தாயுள்ளத்தை உயர்த்திப் போற்ற அழைக்கின்றது.

அவளுடைய செயல்களின் நற்பயனை எண்ணி, அவளை வாழ்த்துங்கள். அவளது உழைப்பை மக்கள் மன்றம் பாராட்டுவதாக. – நீதிமொழிகள் 31:31

மகாபாரத்தின் கதாப்பாத்திரமான கர்ணன் ஒரு கொடை வள்ளலாக இதுவரை கொண்டாடப்படுகின்றது.

கர்ணனை மையப்படுத்தி ஒரு தமிழ் திரைப்படம் ஒன்று கர்ணன் என்ற பெயரில் வந்தது. அதிலே ஒரு காட்சியில் கர்ணன் தனக்கு ஏற்பட்ட இழிநிலையை எண்ணிக் கலங்கியபோது அவரது மனைவி அவரைத் தேற்றும் விதத்தில் ஒரு பாடல் பாடுவார். அந்தப் பாடல் கண்ணுக்குக் குலம் ஏது என்ற அந்தப் பாடலில்....

கொடுப்பவர் எல்லாம் மேலாவர்
கையில் கொள்பவர் எல்லாம் கீழாவார்
தருபவன் இல்லையோ கண்ணா நீ
தர்மத்தின் தாயே கலங்காதே...

என்ற வார்த்தைகளால் அவர் அவரைத் தேற்றுவார்.

மகாபாரத்தில் கர்ணனின் கொடையுள்ளத்தை விளக்குவதாக ஒரு நிகழ்ச்சி, அரஜுனன் கிருஷ்ணனிடம் கர்ணன் என்ன அவ்வளவு பெரிய வள்ளலா? என்ன. உலகில் எல்லோருமேதான் தான தர்மங்கள் செய்கின்றார்கள். நானும்கூடத்தான் எவ்வளவோ முறை தர்மங்கள் செய்திருக்கின்றேன் என்று சொன்னபோது கிருஷ்ணன், ஒரு பெரிய மலைபோன்று குவிந்துள்ள ஒரு செல்வக் குவியலை அர்ஜுனிடம் கொடுத்து இன்று அந்தி சாய்வதற்குள் இந்தச் செல்வங்களை எல்லாம் மிச்சம் வைக்காமல் தான தர்மம் செய்துவிடு என்று சொன்னார். அதற்கு அர்ஜுனன், இது என்ன பெரிய விஷயம் என்று சொல்லிவிட்டு அவ்வழியாக வருவோர், போவோர் எல்லாருக்கும் வாரி வாரி வழங்கினான். மாலை அந்தி சாயும் வேளை வந்தது ஆனால், அவனால் அந்தச் செல்வ மலையில் பாதியைத்தான் தானம் செய்ய முடிந்தது.

அப்போது கிஷ்ணன், உன்னால் இனி இவற்றை முழுமையாக தர்மம் செய்திட முடியாது. இப்போது கர்ணனை அழைத்து இதைத் தானம் செய்யச் சொல்லட்டுமா? என்று கேட்க, அர்ஜுனன், அந்தி சாய சிறிது நேரமே உள்ளது, காலையிலிருந்து இதுவரை இந்த மலையில் பாதியைத்தான் என்னால் கொடுக்க முடிந்தது. இந்த கொஞ்ச நேரத்தில் கர்ணன் எப்படி மீதித் செல்வத்தைக் கொடுக்க முடியும்? அது முடியாது என்று சொன்னான். அப்போது கிஷ்ணன் கர்ணனை அழைத்து போட்டியின் விதிகளைச் சொல்லிவிட்டு அந்தி சாய்வதற்குள் இந்த பாதி மலைபோல குவிந்துள்ள செல்வத்தை நீ தர்மம் செய்திட முடியுமா? என்று கேட்டார். அப்போது கர்ணன், ஓ முடியுமே என்று சொல்லிவிட்டு அந்த வழியாகச் சென்ற ஒரு வழிப்போக்கனைக் கூப்பிட்டு, ஐயா இதோ இந்த மலைபோன்று குவிந்துள்ள செல்வம் முழுவதையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். அப்போது அர்ஜுனன் கர்ணனின் கொடையுள்ளத்தைக் கண்டு பிரமித்துப் போனான்.

கர்ணனை இயேசு கிறிஸ்துவை முன்னிலைப் படுத்தும் கதாப்பாத்திரம் என்றுகூட சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அதில் எவ்வளவு உண்மை இருக்கு என்பது விவாதத்துக்குரியது.

கர்ணன் உண்மையிலேயே ஆகச்சிறந்த கொடை வள்ளல் என்பதை தமிழ் உலகம் நன்கு அறியும். கர்ணன் எதையும் யோசிக்காமல் கொடுப்பவர். தன் தர்மத்தின் பலன முழுவதையும்கூட கொடுத்தவர் என்றும் அறியப்படுகின்றார். கர்ணன் தன்னிடம் இருந்த செல்வங்களை மட்டுமே தந்தார். உலக செல்வங்கள்மீது பற்று வைக்காது அனைத்தையும் மற்றவர் நலனுக்காக் கொடுத்தார்.

ஆனால் ஒரு கிறிஸ்துவனாய், இந்த பிரபஞ்சத்திலேயே இயேசுவைப்போல ஒரு கொடையாளரை யாரும் கண்டுபிடிக்க முடியாது என்று அறிக்கையிடுகின்றேன். அப்ப கர்ணன்? சரியான கேள்விதான். கர்ணன் ஒரு மனிதன். அவர் தன்னிடமுள்ளதை கேட்பவர்களுக்கெல்லாம் எதையும் எதிர்பாராமல் கொடுத்தார்.

ஆனால் இயேசுவோ மனித குலத்திற்காக தன் கடவுள் நிலையையே துறந்தவர். மனித மீட்புக்காக தன் வாழ்வையே சிலுவையில் பலியாக்கினார். மனிதர்களின பாவங்கள் அனைத்தையும் தன்மீது ஏற்றுக்கொண்டு, அவைருக்கும் புனிதத்தையும், இறைவனின் பிள்ளைகள் என்ற உரிமையையும், புது, பெரு, நித்திய வாழ்வையும் வழங்கினார். அவர் அளித்தவற்றுக்கு இணையாக யாரும் கொடுத்ததில்லை, இனியும் கொடுக்கப்போவதும் இல்லை.

தெய்வீகம் பெறவும், வளமான வாழ்வையும் பெற இயேசு ஓர் அருமையான வழியை நமக்குக் கற்றுத் தருகின்றார். அது என்னவென்றால்....

கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். – லூக்கா 6/38.

உட்புறத்தில் உள்ளவற்றைத் தர்மமாகக் கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அனைத்தும் தூய்மையாயிருக்கும். – லூக்கா 9/14

தன்னைப் பின்பற்றிவர விரும்பிய பணக்கார இளைஞனை, பார்த்து...

நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்...– மத்தேயு 19:21)

என்று கூறியது கொடுப்பதன் சிறப்பை எடுத்துச் சொல்கின்றது.

கொடுப்பது சிறுதோ, பெரிதோ, நமது கொடுக்கும் மனநிலையே மிச் சிறந்த பண்பு. அதுவே நம்மை உயர்த்தும் என்பது நம் அனுபவமாகட்டும் கொடை வள்ளலே. நீர் வாழ்க.

*No one has ever become poor by Giving.*
*- Anne Frank -*



# புனிதர் தேவசகாயம் பிள்ளை

# ‘புனிதர்’ ஆன முதல் இந்திய சாமானியர்

**அருட்பணி வில்லியம் சந்தானம்**
குழந்தை இயேசு திருத்தலம்
தூத்துக்குடி -8.

இந்தியாவில் முதல் மறைசாட்சியாக அறிவிக்கப்பட்ட தேவசகாயம் மே மாதம் 15-ம் தேதி புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். இதையொட்டி வத்திக்கான் புனித பீட்டர் பசிலிக்காவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் தேவசகாயத்திற்கு புனிதர் நிலை அறிவிக்கப்பட்டது. இதுவரை புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட புனித அல்போன்சாள், புனித அன்னை தெரேசா அனைவரும் ஏதாவது ஒரு துறவற சபையைச் சேர்ந்தவர்கள். ஆனால், இந்தியாவில் பொது நிலையினர் புனிதராக உயர்த்தப்பட்டு இதுவே முதல்முறை.

வாசுதேவன் நம்பூதிரிக்கும் தேவகி அம்மையாருக்கும் மகனாக 1712-ம் ஆண்டு ஏப்ரல் 23-ம் தேதி இந்து சமயத்தில் நாயர் குலத்தில் பிறந்தவர் தேவசகாயம். இவரது இயற்பெயர் நீலகண்டன்.

சிறுவயது முதலே தன் சமயத்தின்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு எல்லா தெய்வங்களுக்கும் படையல் வைத்து அவர் வழிபட்டார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் புலமை பெற்றிருந்த அவர், வில்வித்தை, வர்மக்கலை மற்றும் போர் பயிற்சியும் மிகச் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்திருந்தார்.

திருவிதாங்கூர் மன்னரின் சமஸ்தானத்தில் ஒரு சாதாரன படைவீரராக வாழ்வைத் தொடங்கிய நீலகண்டன், பின்னாளில் அவருடைய புலமையாலும், அறிவாற்றலாலும் பத்மநாபபுரம் நீலகண்டசாமி திருக்கோவிலின் அதிகாரியாக அமர்த்தப்பட்டார். அவருடைய நேர்மையான செயல்பாட்டால் கவர்ந்திழுக்கப்பட்ட திருவிதாங்கூர் மன்னர், நீலகண்டனை தன்னுடைய கருவூல அதிகாரியாக நியமித்தார்.

1741-ம் ஆண்டு நெதர்லாந்தைச் சேர்ந்த கடற்படை தலைவராக விளங்கிய எஸ்தாக்கி டிலனாய் குளச்சல் போரில் தோல்வியைத் தழுவினார். சிறைக் கைதியான டிலனாயின் ஒவ்வொரு செயலும் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவுக்கு திருப்தியையும் நம்பிக்கையையும் கொடுக்கவே திருவிதாங்கூர் படையை வழிநடத்தும் பொறுப்பை டிலனாயிடம் மன்னர் ஒப்படைத்தார்.

எஸ்தாக்கி டிலனாய் தலைமையில் 1741 முதல் 1745 காலகட்டத்தில் உதயகிரி கோட்டை நவீனமயமாக்கப்பட்டபோது கருவூல அதிகாரியாக செயல்பட்டுக் கொண்டிருந்த நீலகண்டனுக்கு டிலனாயோடு பழகும் வாய்ப்பு கிடைத்தது. விளைவு இருவரும் நண்பர்களாக மாறினர்.

இக்காலக்கட்டத்தில்தான் மேக்கோடு பகுதியைச் சேர்ந்த பர்கவியம்மாள் என்ற நாயர் குலப் பெண்ணை நீலகண்டன் திருமணம் செய்து கொண்டார். 1744-ம் ஆண்டளவில் நீலகண்டன் தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்விலும் அனுபவித்த ஏராளமான துன்பங்கள் தெய்வத்தின் கோபத்தால் ஏற்பட்டது என்று நீலகண்டன் கலங்கினார்.

நீலகண்டனின் எல்லா துன்பங்களையும் துயரங்களையும் கேட்டறிந்த டிலனாய் விவிலியத்திலிருந்து சில நிகழ்வுகளை எடுத்துச் சொல்லி ஊக்கமூட்டினார். குறிப்பாக யோபுவின் வாழ்வில் ஏற்பட்ட எல்லாத் துன்பங்களையும் கடவுளின் அளவில்லா அன்பு அவரைக் காத்து வழிநடத்தியதையும் விளக்கிச் சொன்னார்.

இதனைக் கேட்ட நீலகண்டன் கிறிஸ்தவத்தை முழுமையாக நம்பத் தொடங்கினார். வடக்கன்குளம் சென்ற நீலகண்டன் அருட்பணி. புட்டாரி அவர்களைச் சந்தித்து கிறிஸ்தவராக மாறி திருமுழுக்குப் பெறுவதற்கு விருப்புவதாகத் தெரிவித்தார். ஆனால் நீலகண்டன் உயர் குலத்தைச் சார்ந்தவராகவும் உயர் பதவியில் இருந்தாலும் கத்தோலிக்க இறைநம்பிக்கையை ஏற்றுக் கொள்வதால் அவருடைய உயிருக்குக்கூட உத்தரவாதம் இருக்காது என அறிந்திருந்த அருட்பணி. புட்டாரி திருமுழுக்கு (ஞானஸ்நானம்) கொடுக்க காலம் தாழ்த்தியதோடு கிறிஸ்தவ மதத்தை நன்கு கற்றறியச் சொன்னார்.

உயர் குலத்தைச் சார்ந்த ஒருவர் கிறிஸ்தவராக மாறுகின்றபோது சமூகத்திலிருக்கின்ற உயர் மதிப்பை இழக்க நேரிடும். ஏனெனில் தொடக்க

நிலையில் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை தழுவியவர்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்டர்கள். ஆனால் நீலகண்டன் தன்னை தாழ்த்திக் கொள்ளத் தயங்கவில்லை.

அருட்பணி. புட்டாரி நீலகண்டனின் நம்பிக்கை வாழ்வைக் கண்டு அதிசயித்து அவரது 32 வது வயதில் 1745-ம் ஆண்டு மே மாதம் 14-ம் தேதி திருமுழுக்கு கொடுத்தார். (விவிலியத்தில் லாசர் என்பது தமிழில் தேவசகாயம் என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது)

திருமுழுக்குப் பெற்ற தேவசகாயம் தன்னுடைய மனைவி பர்கவியம்மாவையும் வடக்கன்குளம் அழைத்துச் சென்று அவரும் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்று ஞானப்பூ என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றார். (தெரேஸா என்பதன் தமிழாக்கம்)

நீலகண்டன் கிறிஸ்தவராக மாறிய செய்தி கேட்டு மன்னர் ஆச்சரியப்பட்டார். கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டதால் ஏராளமான அவமானங்களுக்கும் துன்பங்களுக்கும் தேவசகாயம் ஆளானார். அவர்மீது ஏராளமான பொய்க் குற்றச்சாட்டுக்கள் புனையப்பட்டன. தேவசகாயம் ஏராளமான மனிதர்களை மதம்மாற்றிக் கொண்டிருக்கிறார், உடனே அவரை கைது செய்யவில்லை என்றால் மன்னர் பின்பற்றிவரும் மதம் அழிந்து போய்விடும் என மன்னரிடம் பொய்யுரைத்தபோது அதை உண்மையென நம்பி மன்னன் அவசரமாக ஆணை பிறப்பித்தார். தேவசகாயம் திருமுழுக்கு பெற்று நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் 1749-ம் ஆண்டு பிப்ரவரி 23-ம் நாள் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட தேவசகாயம் மன்னரின் முன் நிறுத்தப்பட்டு கத்தோலிக்க கிறிஸ்தவ நம்பிக்கையை மறுதலிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டார். மறுதலிக்காவிட்டால், கடும் தண்டனை வழங்கப்படும் என எச்சரித்த பின்பும் தேவசகாயம் கத்தோலிக்க நம்பிக்கையிலிருந்து பின்வாங்கவில்லை.

உயிரைக் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டாலும் கிறிஸ்துவை மறுதலிக்கமாட்டேன் என்பதில் மிக உறுதியாக இருந்தார் தேவசகாயம். கடும் கோபம் கொண்ட அரசன் தேவசகாயத்தை சிறையில் அடைக்க கட்டளையிட்டான். பின்னர் மரண தண்டனை நிறைவேற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது.

எருக்கம்பூ மாலை அணிவித்து பதினாறு நாட்கள் கால்நடையாக நடக்க வைத்து தேவசகாயத்தைத் துன்புறுத்தினார்கள். எருமையின் மீது ஏற்றி கைகளை பின்புறமாக கட்டி அமரச் சொல்லி எள்ளி நகையாடி முட்கள் நிறைந்த கம்பால் அவரைத் தாக்கிக் கொடுமைப்படுத்தினார்கள். காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்த நிலையில் உடலில் மிளகுத் தூள் பூசி கொளுத்தும் வெயிலில் நிற்க வைத்தும் சித்ரவதை செய்தார்கள்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் எவரும் கிறிஸ்தவத்தைத் தழுவக்கூடாது. தேவசகாயத்தின் வாழ்க்கை எல்லோருக்கும் பாடமாக இருக்க அவரைப் பல இடங்களுக்கு இழுத்துச் சென்று துன்பப்படுத்தினர். இந்தச் சித்ரவதைகளின்போது புலியூர்குறிச்சி என்ற இடத்துக்கு வந்தபோது தேவசகாயம் மிகவும் களைத்துத் தாகமுற்றார். யாரும் தண்ணீர் கொடுக்காததால் கண்ணீரோடு பிரார்த்தனை செய்து தன் முழங்கை முட்டால் பாறையில் இடிக்க அதிசயமாக பாறையிலிருந்து நன்னீர் சுரந்து தாகம் தீரத் தண்ணீர் குடித்தார். இன்று அந்தப் பாறை முட்டிச்சான் பாறை என்றழைக்கப்படுகிறது.

புலியூர்குறிச்சியிலிருந்து பெருவிளை என்ற இடத்திற்குகு இழுத்துச் சென்று வேப்பமரம் ஒன்றில் மிக இறுக்கமாக கட்டி வைக்கப்பட்டார். அவரை அமரவும் தூங்கவும்விடாமல் ஏறக்குறைய ஏழு மாதங்கள் துன்புறுத்தினர். இறுதியாக ஆரல்வாய்மொழி கொண்டு சென்று அங்குள்ள சிறையில் அடைத்தார்கள். மலைப் பகுதியாக இருந்ததால் அதிக மக்கள் நடமாட்டம் இல்லாத அங்கு இரகசியமாக அவரை கொலை செய்ய அங்கு கொண்டு சென்றிருந்தனர். தேவசகாயம் ஆரல்வாய்மொழியில் இருப்பது மக்களுக்குத் தெரியவந்து பலரும் வந்து சந்தித்தனர். தேவசகாயத்தை இனியும் உயிரோடு விட்டால் கிறிஸ்தவம் அதிகமாக வளரும் என அஞ்சிய ஆட்சியாளர்கள் விரைவாக அவரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினர்.

1752-ம் ஆண்டு சனவரி 14ம் நாள் இரவு படைவீரர்கள் காற்றாடிமலை என்னும் பகுதிக்கு இழுத்து வந்து உயர்ந்த மலையில் ஏற கட்டாயப்படுத்தினர். தேவசகாயத்தால் மலையில் ஏற இயலாததால் ஒரு கம்பில் கட்டிச் சுமந்து மலை உச்சிக்குக் கொண்டு சென்றனர்.

சாவது உறுதி என்பதையறிந்து கொண்ட அவர் கடைசி இறைவேண்டலுக்காக நேரம் கேட்டார். இறைவேண்டல் முடித்தபின் படைவீரர்கள் அவரை மலையில் நிற்கவைத்துத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

கத்தோலிக்க மறைக்காகக் கொல்லப்பட்ட அவரது சடலத்தை யாரும் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காக அவரது உடலை விலங்குகளுக்கு இரையாக முட்புதருக்குள் வீசினார்கள்.

தேவசகாயத்தின் உடலை ஐந்து நாட்களுக்குப் பிறகு கண்டுபிடித்த கிறிஸ்தவ மறைப்பணியாளர்கள் கிடைத்த அவரின் உடற்ப்பாகங்களை கோட்டார் தூய சவேரியார் பேராலயத்தின் பீடத்தின்முன் அடக்கம் செய்தார்கள்.

வரலாறு தெளிவாயிற்று. பாடம் என்னவென்பதே என் பகிர்வு.

தமிழகத்தின் பொது நிலைப்புனிதர என்ற பட்டம் நம் சிந்தனைக்குரியது. தமிழகத்தில் ஒரு ஆணருக்கு/குருவுக்கு/துறவிக்குக் கிடைக்காத மதிப்பும் மாண்பும் பொதுநிலை மனிதருக்குக் கிடைத்திருப்பதை தமிழகத் திருஅவை மகிழ்ச்சியோடு முதலில் கற்ற வேண்டும்.

பொதுநிலையினரின் பங்களிப்பு, பங்கேற்பு அதிகமாக அருட்பணி நிலையிலிருப்போர் வழிவிட வேண்டும். பொதுநிலையினரும் பங்கேற்பு நிலையில் அதை ஒரு அந்தஸ்தின் அடையாளமாகப் பார்க்காமல் கிறிஸ்துவின் நம்பிக்கை அடிப்படையாகக் கொண்ட சேவைத் தளமாகக் கருத வேண்டும். இறுதியாக எனது பிரார்த்தனையும்கூட.



# விவிலியம் அறிவோம் – 39

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## யாக்கோபு கடவுளுடன் நடத்தும் மற்போர்

யாக்கோபு லாபான் உடன்படிக்கைக்குப் பிறகு லாபான் காரானுக்குத் திரும்புகிறார்; யாக்கோபு தனது தந்தையின் நாட்டை நோக்கிப் பயணிக்கிறார். வழியிலே கடவுளின் தூதர்கள் அவரைச் சந்திக்கின்றனர். யாக்கோபு காரானுக்குச் செல்லும்போதும் கடவுளின் தூதர்கள் அவரைச் சந்திப்பதைப் பார்க்கிறோம் (28:12). கடவுளின் தூதர்கள் யாக்கோபைச் சந்திக்கும் இந்நிகழ்வு யாக்கோபு லாபானுடன் செய்த உடன்படிக்கைகடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதைக் குறிப்பதாகவும் கருதலாம். யாக்கோபு ஆண்டவர் ஆபிரகாமுடன் ஆண்டவர் செய்த உடன்படிக்கையின் வாரிசாக இருப்பதால் அதை நினைவு+ட்டும் ஒரு அடையாளமாகவும் கடவுளின் தூதர்களின் இந்தச் சந்திப்பைக் கருதலாம். யாக்கோபு கடவுளின் தூதர்களை கடவுளின் படையாகப் பார்க்கிறார். எனவே அவர்கள் தன்னைச் சந்தித்த இடத்திற்கு மகனயிம் எனப் பெயரிடுகின்றார். இஸ்ரயேலின் மூதாதையர் பற்றிய பதிவுகளில் கடவுள் தோன்றி அவர்களுடன் பேசிய இடத்திற்குப் பெயர் வைப்பது பழக்கத்தில் இருந்த ஒன்று (தொநூ 16:14; 21:31; 26:20, 33; 28:19). இதன் வழியாக கடவுளின் பிரசன்னம் அந்த இடத்தில் உள்ளது என்பது கூறப்படுகிறது. யாக்கோபு பயணத்தைத் தொடர்கிறார். ஏதோம் நாட்டின் எல்லைப் பகுதிக்கு வருகிறார். ஏதோம் நாடு அவரது சகோதரரான ஏசா வாழும் நாடு. ஏசா சேயிர் என அழைக்கப்பட்ட பகுதியில் வாழ்கிறார். யாக்கோபு தனது சகோதரனான ஏசாவுக்குப் பயந்துதான் காரானுக்குத் தப்பியோடினார். இருபது ஆண்டுகள் கழித்து இப்போது தனது புதல்வர்களுடனும், மனைவியருடனும், பெரும் செல்வங்களுடனும் திரும்பிவருகிறார். சகோதரனைப் பற்றிய அச்சம் இன்னும் மறையவில்லை. ஏசாவினால் தனக்கும், புதல்வர்களுக்கும் அவர்களின் தாய்களுக்கும் ஆபத்து ஏற்படலாம் என நினைக்கிறார். ஏசாவுடன் சமரசம் செய்துகொள்ள பல முயற்சிகளை எடுக்கிறார். ஏசாவுக்கு அன்பளிப்புகள் பலவற்றை அவருக்குமுன் அனுப்பிவைக்கிறார். ஏசா-யாக்கோபு சந்திப்பு பற்றி அடுத்த பிரிவில் நாம் ஆழமாகச் சிந்திக்கலாம். இந்தப் பிரிவில் யாக்கோபு கடவுளுடன் நடத்தும் மற்போர் பற்றி சிந்திப்போம்.

யாக்கோபு ஏதோம் நாட்டின் எல்லைப் பகுதியில் நிற்கிறார். அந்த இரவிலேயே அவர் எழுந்து, தம் இரு மனைவியரையும் இரு வேலைக்காரிகளையும் புதல்வர் பதினொருவரையும் அழைத்துக் கொண்டு யாபோக்கு ஆற்றின் துறையைக் கடந்தார் என வாசிக்கிறோம். யாபோக்கு ஆறு இஸ்ரயேல் நாட்டின் வடகிழக்கு எல்லையைக் குறிக்கும் நிலப்பகுதி (நீத 11:13-22) என்கிறது விவிலியம். யாக்கோபு யாபோக்கு ஆற்றின் துறையைக் கடந்தார் (ya'abor'eth 'abar) என்ற சொற்றொடர்ஆறுகளைக் கடப்பதற்கு மக்களிடையே இருந்த அச்சத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. யாக்கோபு தன்னுடையவர்களை ஆற்றைக் கடக்கச் செய்தபோது, தமக்கிருந்த அனைத்தையும் அனுப்பி வைகிறார். யாக்கோபு மட்டும் ஆற்றின் மறுகரையில் தனித்திருக்கிறார். அப்போது ஒரு ஆடவன் அங்கு தோன்றி அவரோடு மற்போரிடுகிறார். கானானேய மூலங்களின்படி ஆறுகள் தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப் பட்டவை. பெனிசியர்கள் நடுவில் ஒரு ஆற்றின் தெய்வத்தோடு போராடிய வீரனைப் பற்றிய கதை

ஒன்று உண்டு. இந்தப் பின்னணியில் பார்த்தால் யாக்கோபின் இந்த மற்போர் யாக்கோபிற்கும் ஏதோமியர்களின் பிரதிநிதியான ஏசாவின் பாதுகாப்பு தெய்வத்திற்குமிடையே நடக்கும் போராட்டமாகக் கருத வாய்ப்பிருக்கிறது. யு+த ரபிக்களின் மரபுப்படி யாக்கோபோடு மற்போரிட்டவர் ஏசாவின் பாதுகாவலர் தெய்வம் ஆகும். ஆனால் இறைவாக்கினர் மரபுப்படி அவர் ஏலோகீம் என்ற தெய்வத்தின் தூதர் ஆகும். இந்த ஏலோகீமின் தூதர் (ஊநஜ நுடழாஷஅ) கானானேய கலாச்சாரத்தில் வரும் ஒரு தெய்வம். ஒளிக்கு அஞ்சுகின்ற இந்தத் தெய்வம் மனிதர்களால் வெற்றிகொள்ளப்படக்கூடியவர் (ஓசியா 12:4).யாக்கோபிற்கும் ஆடவருக்கும்; இடையில் நடக்கின்ற மற்போர் இரவு முழுவதும் நடக்கிறது. யாக்கோபை வெற்றிகொள்ள முடியாது என யாக்கோபுடன் மற்போரிட்ட ஆடவர் நினைக்கிறார். எனவே யாக்கோபின் தொடையை அடித்து உடைக்கிறார். இந்த அனுபவத்தில் தன்னை எதிர்த்துப் போரிடும் ஆடவர் சாதாரண மனிதர் இல்லை என்பதை யாக்கோபு உணர்ந்திருக்கவேண்டும். எனவேதான் அவரைக் கடவுளின் தூதராகப் பார்க்கிறார்.

யாக்கோபு தன்னுடன் மற்போரிடும் ஆடவரைக் கடவுளின் தூதராகப் பார்ப்பதால் அவரிடமிருந்து ஆசிர் பெற விரும்புகிறார். ஆனால் கடவுளின் தூதரோ யாக்கோபிடமிருந்து தப்பிச் செல்ல வேண்டும் என எண்ணுகிறார். எனவேதான் அவர் யாக்கோபிடம், என்னைப் போகவிடு; பொழுது புலரப்போகிறது என்கிறார். யாக்கோபு அவரிடம், நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போகவிடேன் என மறுமொழி கூறுகிறார். யாக்கோபு கடவுளின் ஆசியைப் பெறுவதில் பிடிவாதமாக இருக்கிறார். இத்தியர்களின் இலக்கியத்தில் இப்படியொரு நிகழ்வைப் பார்க்கிறோம். இத்தியர்களுக்கான சமய வழிபாட்டில் பெண் தெய்வமான கேபாத்து என்பவருக்கும் இத்திய அரசனுக்கும் இடையில் போராட்டம் ஒன்று நடக்கிறது. அரசன் கேபாத்து தேவதையைப் போகவிடமால் தடுத்து நிறுத்துகிறான். இந்தப் போராட்டத்தில் யார் வெற்றிபெறுவார்கள் என்ற உரையாடல் நடக்கிறது. இறுதியில் அரசன் கேபாத்து தேவதை தன்னை ஆசிர்வதிக்கவேண்டும் என வினவுகிறான். யாக்கோபும் கடவுளின் ஆசியைக் கேட்கிறார். ஆனால் அவர் கடவுளின் ஆசியைப் பெறுவதற்கு அவரில் சில மாற்றங்கள் நிகழவேண்டும். அவர் ஒரு புதிய மனிதராக மாறவேண்டும். எனவேதான் கடவுளின் தூதர் உன் பெயர் என்ன? என யாக்கோபிடம் கேட்கின்றார். அவரும் நான் யாக்கோபு எனப் பதில் கூறுகின்றார். யாக்கோபு என்ற பெயருக்கு ஏமாற்றுக்காரன், அடுத்தவர் இடத்தில் தன்னை வைப்பவன் என்ற அர்த்தங்கள் உண்டு. யாக்கோபு ஏமாற்றுக்காரனாக இருக்கும் வரை கடவுளின் ஆசிரைப் பெறமுடியாது. அவர் மாற்றம் பெறவேண்டும். கடவுளின் தூதர் யாக்கோபின் பெயரை மாற்றுகின்றார். விவிலியத்தில் பெயர் மாற்றத்தை இரண்டு விதங்களில் புரிந்துகொள்ளலாம். முதலாவது பெயர் மாற்றம் ஒரு தோற்றக்கதையாக இருக்கலாம். உதாரணமாக,யாக்கோபின் புதல்வர்களிலிருந்து உருவான மக்களினத்திற்கு எவ்வாறு இஸ்ரயேல் என பெயர் வந்தது என்ற கேள்விக்கு விடையாக இந்தப் பெயர் மாற்றத்தை புரிந்துகொள்ளலாம். இஸ்ரயேல் மக்களின் முதல் குலமுதுவரான அபிராமின் பெயர் ஆபிரகாம் என்று கடவுளால் மாற்றப்பட்டதற்கும் ஒரு பொருள் இருந்தது. ஆபிரகாமுடன் ஆண்டவர் செய்த உடன்படிக்கையின் வழியாக அவர் பலநாடுகளின் தந்தையாகின்றார் என்பதைக் குறிப்பதாக அந்த பெயர் மாற்றம் உள்ளது. இரண்டாவதாக, பெயர் மாற்றம் செய்பவர் பெயர் மாற்றம் செய்யப்பட்டவரின் மீது கொண்டுள்ள அதிகாரத்தை வெளிப்படுத்துவதாகவும் இது



உள்ளது. பண்டைய காலத்தில் பேரரசன் ஒருவன் அவனுக்குக் கீழ் கப்பம் கட்டி வாழும் சிற்றரசனுடன் உடன்படிக்கை செய்து கொண்டால் அவனுக்குப் புதிய பெயர் ஒன்றைச் சூட்டி அந்தப் பெயரில் அழைப்பதும் வழக்கத்தில் இருந்தது. இது பேரரசன் சிற்றரசன் மீது கொண்டுள்ள அதிகாரத்தை வெளிப்படுத்துவதற்கான குறியீடாகும்.

கடவுளின் தூதர் யாக்கோபிடம், உன்பெயர் இனி யாக்கோபு எனப்படாது, இஸ்ரயேல் எனப்படும் என்கிறார். இஸ்ரயேல் என்ற எபிரேயச் சொல்லைப் பிரித்து இஸ் + ரா + எல் என்று பார்த்தால் கடவுளைக் காணும் மனிதன் என்று பொருள் கொள்ளலாம். மாறாக இஸ்ரா + எல் எனப் பிரித்தால் கடவுளின் கட்டுப்பாட்டில்; இருப்பவர் அல்லது கடவுளால் ஆளப்படுபவர் என்ற பொருளைப் பெறலாம். அதாவது கடவுளின் தூதர் செய்கிற பெயர் மாற்றம் யாக்கோபு இனி ஏமாற்றுக்காரராக இல்லாமல் கடவுளைக் காண்பவராக, கடவுளால் ஆளப்படுபவராக இருப்பார் என்பதைக் கூறுவதாக உள்ளது.மேலும் கடவுளின் தூதர் யாக்கோபிடம், நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய் என பெயர் மாற்றத்திற்கான இன்னொரு காரணத்தையும் கூறுகிறார்.யாக்கோபு பெயர் மாற்றம் பெற்றபின் கடவுளின் தூதரிடம், உம் பெயரைச் சொல்லும் எனக் கேட்கிறார். கடவுளின் தூதர் அவரது பெயரைக் கூறவில்லை. ஆனால் யாக்கோபிடம் அவர் என் பெயரை நீ கேட்பதேன்? எனக் கூறி அந்த இடத்திலேயே அவருக்கு ஆசி வழங்கினார் என வாசிக்கிறோம். யாக்கோபு கடவுளின் ஆசியைப் பெறுகிறார். ஆசி வழங்கிய





கடவுளின் தூதர் அங்கிருந்து மறைந்து போகிறார். யாக்கோபு அப்போதுதான் முழு உண்மையையும் உணர்கிறார் எனக் கூறவேண்டும்.யாக்கோபின் மற்போர் ஒரு கடவுள் அனுபவம். கடவுள் அவரைச் சந்தித்திருக்கிறார்; அவருக்கு ஒரு புது அனுபவத்தைத் தந்திருக்கிறார். உடன்படிக்கையின் வாரிசான யாக்கோபு இஸ்ரயேலாக ஒரு புது உலகத்தைப் படைக்கவேண்டும். அதற்கான ஆசிரை கடவுளிடமிருந்து அவர் பெறுகிறார். இந்த நிகழ்வின்போது இஸ்ரயேல் மக்களினம் உருவாவதற்கு காரணமாக வருகின்ற முதுபெரும் அன்னையர்களான லேயா, ராக்கேல், சில்பா மற்றும் பில்கா தங்களது பதினொரு மகன்களோடு யாபோக்கு ஆற்றின் மறுகரையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது (காண்க தொநூ 32:23-25).இஸ்ரயேல் ஒரு தனிமனிதர் அல்ல; அவர் ஒரு மக்களினத்தின் தந்தை. அவரிலிருந்து உருவாகின்ற இந்த மக்களினந்தான் கடவுளின் ஆசிபெற்ற மக்களினமாக, கடவுளின் மக்களாக அறியப்படுவர். எனவே யாக்கோபு கடவுளின் தூதரோடு மற்போரிடும் இந்த நிகழ்வு யாக்கோபின் வாழ்வில் வருகின்ற நிகழ்வுகளில் ஒரு முக்கியமான நிகழ்வு.

இந்த நிகழ்வின் இறுதியில் இரண்டு தோற்றக் கதைகளின் குறிப்புகள் வருகின்றன. முதலாவதாக, யாக்கோபு கடவுளின் தூதருடன் மற்போரிட்ட இடம் பெனியேல் என ஏன் அழைக்கப்படுகின்றது என்ற கேள்விக்கு விடைகூறப்படுகின்றது. யாக்கோபு, நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி, அந்த

இடத்திற்குப் பெனியேல் என்று பெயரிட்டார் என வாசிக்கிறோம். இரண்டாவது, இஸ்ரயேல் மக்கள் ஏன் தொடைச் சந்து சதைநாரை உண்பதில்லை என்பதற்கான காரணம் கூறப்படுகிறது. யாக்கோபிற்கும் கடவுளின் தூதருக்கும் இடையிர் நடந்த மற்போரில் யாக்கோபை வெற்றிகொள்வது கடினம் எனக் கண்ட கடவுளின் தூதர் யாக்கோபின் தொடையை உடைக்கிறார். இதனால் மற்போர் முடிந்து வருகையில் நொண்டி நொண்டி நடந்தார் என அறிகிறோம். இதன் பொருட்டு இஸ்ரயேல் மக்கள் தொடைச் சந்து சதைநாரை உண்பதில்லை எனக் கூறப்படுகிறது. ஒரு சில

அறிஞர்கள் இந்தப் பழக்கம் பற்றிக் கூறுகையில் இந்தப் பழக்கம் பெனியேல் பகுதியில் வாழ்ந்த அமோரியர்களின் கலாச்சாரத்திலிருந்து வருவதாகவும் இருக்கலாம் (யோசுவா 10:1-19, நீத 8:8-17) எனக் கருதுகின்றனர். பொதுவாக தோற்றக் கதைகள் பெயர் தோற்றம், சில பழக்க வழக்கங்களின் தோற்றம் போன்றவற்றைக் கூறுகின்றன. நாடோடிக் கதைகளில் பெயர் தோற்றக் கதைகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கலாம் ஆனால் அவை உண்மையான மரபுகளையும் உள்ளடக்கியிருக்கலாம். யாக்கோபு பிரிவில் வருகின்ற இந்தத் தோற்றக் கதைகள் இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கையுடன் அதிகமாகத் தொடர்புடைய இடங்களாக உள்ளன. எனவே இந்தக் கதைகள் உண்மையை மூலமாகக் கொண்ட மரபுகளிலிருந்தே தோன்றியிருக்க வேண்டும்.

யாக்கோபின் வாழ்வில் நடக்கின்ற இந்த முக்கிய நிகழ்வு, நமக்குப் பல பாடங்களையும் கற்பிக்கிறது. முதலாவதாக,தன்னுடன் மற்போரிட்ட ஆடவர் கடவுளின் தூதர் என்பதை புரிந்துகொண்ட யாக்கோபு அவரது ஆசியைப் பெறுவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறார். நீர் எனக்கு ஆசி வழங்கினா லொழிய உம்மைப் போகவிடேன் என உறுதியாக நிற்கிறார். இந்த விடாப்பிடியாக வேண்டும் குணம் நம்மிடமும் இருக்கவேண்டும். நாம் கடவுளிடம் பலவற்றைவேண்டுகிறோம். நமது தேவைகளை அவரிடம் கேட்கிறோம்; நாம் கேட்பவற்றை அவர் தரவேண்டுமென்று விரும்புகிறோம். கடவுளிடம் வேண்டும்போழுது யாக்கோபிடம் இருந்த அந்த உறுதி, விடாப்பிடித் தன்மை நம்மிடமும் இருக்கவேண்டும். நான் கேட்பதை எனக்குத் தந்தாலொழிய நான் உம்மை விடமாட்டேன் என்ற உறுதியுடன் கடவுளிடம் கேட்கவேண்டும். நம்மை அன்பு செய்யும் கடவுள் நிச்சயமாக நாம் கேட்பதைத் தருவார். இரண்டாவதாக, கடவுளின் ஆசீரை நாம் நிறைவாகப் பெறுவதற்கு நம்மில் மாற்றங்கள் நிகழவேண்டும். யாக்கோபு ஏமாற்றுக்காரராக இருந்தவர்; தனது சகோதரனுக்குச் சேரவேண்டிய உரிமைகளை அபகரித்துக் கொண்டவர். அவரது தாய்மாமனையும் ஏமாற்றி பெரும் செல்வத்தை உருவாக்கியவர். அவரது பெயர் மாற்றம் அவரது வாழ்விலும் மாற்றத்தைக் கொண்டுவருவதாக மாறுகிறது. ஏமாற்றுக்காரராக இருந்த யாக்கோபு கடவுளின் ஆளுகைக்குள் வருபவராக, அவரால் கட்டுப்படுத்தப்பட்டவராக, கடவுளைக் காண்பவராக மாறுகின்றார். இந்த மாற்றம் கடவுளின் ஆசீரை அவருக்குக் கொண்டுவருகிறது. நமது வாழ்விலும் உண்மையான மாற்றங்கள், கடவுளுக்கு ஏற்புடைய மாற்றங்கள் நிகழும்போது கடவுளின் ஆசிர் நிறைவாக நமக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF





# மறையுரை

அருட்பணி. **ஜஸ்டின் சேவியர் ராஜ்**
பங்குத்தந்தை,
உடுமலைப்பேட்டை, கோவை மறைமாவட்டம்.

**பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு**

**22-05-2022**

**தி.ப. 15:2, 22-29 / தி.வெ. 21:10-14,22,23 / யோவா 14:23-29**

## என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்

இரண்டு முறை கேன்சர் நோயின் பிடியில் இருந்து தப்பி உயிர் வாழும் சீன் ஸ்வார்னர் **(Sean Swarner)** என்பவர் தடைகளை கடந்து சாதனை செய்வதற்கு நமக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். 14 வயது நடக்கும் போது அவருக்கு **(Hodgkins Disease)** என்ற நோய் முற்றிய நான்காம் அளவீட்டில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. சாவுக்கு மிக மிக அருகாமையில் இருந்தார் மூன்று மாதங்கள் மட்டுமே வாழ முடியும் என்று மருத்துவர்களால் கணித்து சொல்லப்பட்டது ஒன்றரை ஆண்டுகாலம் தீவிரமான கீமோதெரபி என்ற சிகிச்சைக்கு பிற்பாடு மீண்டுமாக மற்றொரு கொடிய நோய்க்கு ஆளானார் நான்கு மாதங்களுக்குள் அஸ்கின் என்ற நோய் **(Askins Disease)**அவரது நுரையீரலைத் தாக்கி கால்ஃப் பந்து அளவுக்கு வீக்கம் வந்துவிட்டது. இரண்டு வாரங்கள் தான் உயிர் வாழ்வார் என்று கணிக்கப்பட்டது. ஒன்றரை ஆண்டுகால தீவிர சிகிச்சைக்கு பிற்பாடு உலகமே அதிசயிக்கும் வண்ணம் 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றார்.

15 ஆண்டுகளுக்குப் பிறகு குறைவான அளவுள்ள சுவாசப் பையோடு எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தார். உலகத்திலேயே புற்றுநோயிலிருந்து மீண்டு உயரமான மலைகளான எவரெஸ்ட், கிளிமஞ்சாரோ, எல்ப்ரஸ் உள்ளிட்ட பல சிகரங்களை அடைந்துள்ளார் அவர். அடிக்கடி சொன்ன வாக்கியம் **“No Challange is too great; no peak too high”** அதாவது எந்த சவாலும் உயர்ந்தது அல்ல ; எந்த சிகரமும் உயர்ந்தது அல்ல. அந்த மனிதர் கண்ட உண்மை என்னுள் இருந்த ஆற்றல் அந்த மருத்துவமனை படுக்கையில் இருந்து எழ வைத்து உனக்கு ஒரு வாய்ப்பு உள்ளது என கூறியது என்றார்.

இறையேசுவில் அன்புக்குரியவர்களே மனமிருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்வார்கள். இன்றைய முதல் வாசகத்தில் விருத்தசேதனம் குறித்து, மக்களிடையே பிரிவினை உண்டாகிறது. மோசேயின் சட்டப்படி விருத்தசேதனம் செய்யாவிட்டால் மீட்பு அடைய முடியாது என்ற குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. விருத்தசேதனம் என்பது ஒரு வெளிப்புற அடையாளம். ஆனால் இயேசுவின் பெயரில் விசுவாசம் வைத்து அதனை நாவால் அறிக்கையிட்டால் மீட்பு அடைய முடியும், விருத்தசேதனம் தேவையில்லை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இந்த சமயத்தில் திருச்சபையின் அதிகாரிகள் நன்கு செயல்பட்டு நியாயத்தை நிலை நிறுத்துவதை இன்றைய முதல் வாசகத்தில் வாசிக்க கேட்போம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இறைமகன் இயேசு அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். அந்த அமைதி உலகம் தரும் அமைதி போல் அல்ல என்கிறார். உலகம் தருகிற அமைதி மயான அமைதி. தன் கருத்துக்கு முரண்படுகிவர்களைக் கொன்று அல்லது நடைபினமாக்கி உருவாகின்ற அமைதியில் பிழைக்க தேடுவது உலகம் தரும் அமைதி. ஆனால் இயேசு தரும் அமைதி நியாயமானது, உண்மையானது. இழப்புகள் ஏற்பட்டாலும் உருவாகின்ற அமைதி அனைவருக்கும் உரியது; அனைவருக்கும் பொதுவானது. அந்த அமைதியை தூய ஆவியார் தருவார் என்று சொல்கிறார். தூய ஆவியார் தன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அனைவரையும் கொன்று கல்லறை அமைதியை உருவாக்குபவர். நாம் அனைவரும் தூய ஆவியாரின் வல்லமையால் உண்மைக்கு சான்று பகிரவும், இயேசு தருகிறார் அமைதியை உருவாக்கவும் தேவையான அருளை ஜெபிப்போம்.

– ஆமென்



# பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு

தி.ப.15:2, 22-29, தி.வெ.21:10-14,22,23 யோவா. 14:23-29

22-05-2022



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசு விட்டுச் சென்ற அருங்கொடையான அமைதியையும், அவரது துணையாளரையும் பெற்றுக் கொண்டு அமைதியின் மக்களாக வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

கடவுளின் கட்டளையைக் கடைப் பிடித்து, அவரது அன்பில் நிலைத் திருக்க இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது.

இன்றைய வாசகங்கள் தூய ஆவியானவரின் துணைகொண்டு உண்மையின் வழியில் நடக்க நம்மை வலியுறுத்துகிறது. இது நாள்வரை உலகின் போக்கில் பயணம் செய்து கொண்டிருக்கும் நம்மை இன்றைய நற்செய்தி இயேசுவின் பாதைக்கு திரும்பி வர அழைக்கிறது.

இயேசு விட்டுச் சென்ற அமைதியை, அவர் விரும்பி அளிக்கும் அமைதியை நாம் பெற்றுக்கொள்ள ஆவல் உள்ளவராய் இருக்கிறோமா? அதைப் பெறுவதற்கான தகுதியை உடையவர்களாக இருக்கிறோமா? என்பது குறித்து இன்றைய வழிபாட்டின் வழியாகச் சிந்திப்போம்.

தூய ஆவியார் எனும் துணையாளரின் வழிகாட்டுதலை இறைவன் மீது கொண்ட அன்பின் வழியாகவும், அந்த அன்பு உந்தித் தள்ளுகின்ற செயல்கள் வழியாகவுமே பெற முடிகிறது. இறையன்பில் முதிர்ந்து, பிறரன்புச் செயல்களில் கனிந்து வருவதே இறைவன் தரும் அமைதி. அந்த அமைதி அன்பில் விளைந்த கனி என்பதை ஆண்டவர் இயேசு தன் வார்த்தைகளால் நமக்கு காண்பிக்கிறார்.

தூய ஆவியின் அருளை திருமுழுக்கு மற்றும் உறுதி பூசுதல் வழியாக நிறைவாகப் பெற்றுள்ள நாம் உலகின் போக்கில் செல்லாமல் இயேசுவின் பாதையில் செல்ல அவர் விட்டுச் சென்ற அமைதியைப் பெற்று அமைதியின் மக்களாக, அமைதியின் தூதுவர்களாக சாட்சிய வாழ்வு வாழ இத்திருப்பலியின் வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

புற இனத்தார் கட்டாயம் விருத்த சேதனம் செய்து கொள்ள வேண்டுமா? என்பதை வைத்து பிரச்சனை எழுந்தபோது எருசலேம் சங்கத்தார் சமரச வழியில் முடிவு எடுப்பதை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. விருத்த சேதனமா? விசுவாசமா? என்ற கேள்வி எழுந்தபோது விசுவாசமே என்ற தெளிவை பிரகடனப்படுத்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

யோவான் தனது காட்சியில் திருச்சபையாகிய விண்ணக எருசலேமையும், அதன் வாயில்களில் 12 குலங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பதையும் காண்கிறார். உயிர்த்த கிறிஸ்து திருத்தூதர்களின் துணையோடு திருச்சபையை வழி நடத்திச் செல்வதை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

1) அருட்கொடைகளின் நாயகனே இறைவா, உம் திருஅவையை வழி நடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், எம் பங்குத் தந்தையர், அருட் பணியாளர்கள் அனைவரும் உம் திருமகன் இயேசுவில் ஒன்றிணைந்து செயல்பட, அவர் விட்டுச் சென்ற அன்பினை பகிர்ந்து, ஆன்மீகக் கருத்துக்களை பரிமறி சமாதானத்தின் தூதுவர்களாக வாழ வரமருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்.

2) அன்புத் தந்தையே இறைவா, எங்களை உமது அன்பின் கருவி யாக்கும். வெறுப்பு உள்ள இடத்தில் அன்பையும், மனவருத்தம் உள்ள இடத்தில் மன்னிப்பையும், சந்தேகம் உள்ள இடத்தில் விசுவாசத்தையும், அவநம்பிக்கை உள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும், துன்பம் உள்ள இடத்தில் மகிழ்ச்சியையும் நாங்கள் விதைத்திட அருள் புரிய வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்.

3) அன்பும் பரிவும் கருணையும் கொண்ட இறைவா, இவ்வுலகம் தரும் அமைதி தற்காலிகமானது. ஆனால் கிறிஸ்து தரும் அமைதி நிரந்தரமானது. இவ்வுலகம் தரும் அமைதி மக்களை பிரித்தாளுகிறது. ஆனால் கிறிஸ்து தரும் அமைதியோ அனைவரையும் பாகுபாடின்றி ஒன்றிணைக்கின்றது. இவ்வுலகம் தரும் அமைதி பகைமையை வளர்க்கிறது. கிறிஸ்து தரும் அமைதி மன்னிக்கும் மனாப்பான்மை வழங்கு கிறது என்பதை முழுமையாக உணர்ந்து இயேசுவின் அன்புறவில் நிலைத்து வாழும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) காக்கின்றவராய், கரம் பிடித்து வழி நடத்துபவராய், கருணை உள்ளம் கொண்டவராய் விளங்கும் அன்பு இறைவா, எங்கள் வாழ்வில் வரும் துன்ப துயரங்களை பிறர் நலனுக்காக பொறுமையுடன் ஏற்று, அவற்றை உமக்கு ஒப்புக்கொடுத்து துன்புறும் மக்களுக்கு என்றும் துணை நிற்கும் மனப் பக்குவத்தை பெற்று, கடவுளின் சாயலாய் படைக்கப்பட்ட சக மனிதரை மாண்போடு நடத்தி வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்து மொழிக் குறள்



**அப்போ தகமகிழ்ந்தே ஆர்ப்பரிமின் ஏராள**
**வைப்பேறி மல்கிடும் வான்**



அப்போது மனம் மகிழ்ந்து ஆரவாரம் செய்யுங்கள். அப்பொழுது விண்ணுலகில் புதையலாகிய செல்வம் உயர்ந்து மிகுதியாகும்.

வைப்பு – புதையலாகிய செல்வம்,
ஆப்பரிமின் – ஆரவாரம் செய்யுங்கள், ஏறி – உயர்ந்து, மல்கிடும் – மிகுதியாகும்.

# வத்திக்கான் செய்திகள்



## சிறுமிகளுக்கு தரமான கல்வி வழங்கப்படவேண்டும்

**இப்பூமியை தந்தை
என அழைப்பதில்லை,
அன்னை என்றுதானே நாம்
அழைக்கின்றோம்.
எனவே இப்பூமிக்கோளத்தைப்
பாதுகாப்பதில் பெண்கள்
மிகவும் சக்திவாய்ந்தவர்கள்.**

**– திருத்தந்தை பிரான்சிஸ்**

மே 19, இவ்வியாழன் மாலையில், உரோம் உர்பான் பாப்பிறை பல்கலைக்கழகத்தில், Scholas Occurrentes உலகளாவிய கல்வி அமைப்பை, "Scholas Occurrentes" பாப்பிறை அமைப்பாக உருவாக்கி, அதனைக் கொண்டாடிய விழாவில் கலந்துகொண்டு, உலக அளவில் சிறுமிகளுக்கு தரமான கல்வி வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அயர்லாந்து நாட்டின் தலைநகர் டப்ளினை மையமாகக்கொண்டு இயங்கும் R2 (U2) இசைக்குழுவின் புகழ்பெற்ற பாடகர் Bono Vox அவர்கள் முக்கிய விருந்தினராக கலந்துகொண்ட இவ்விழாவில் இஸ்பானிய மொழியில் தன் சிந்தனைகளைத் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

யூ2 குழுவின் இசை நிகழ்ச்சியோடு சிறப்பிக்கப்பட்ட இவ்விழாவில், போனோ அவர்களும், சிறுமிகளுக்கு கல்வி வழங்குவது, கடும் ஏழ்மையை ஒழிக்க மிகவும் வல்லமைமிக்க சக்தி என்று கூறியுள்ளார்.

### சிறுமிகளுக்கு கல்வி

இவ்வுலகிலும் காலநிலையிலும் மாற்றத்தைக் கொணர்வதற்கு பெண்களும், சிறுமிகளும் ஒரே மாதிரியான முக்கிய பங்கைக் கொண்டிருக்கின்றனர் என்று திருத்தந்தையே, தாங்கள் கருதுகின்றீர்களா என போனோ அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த திருத்தந்தை, நாம் இப்பூமியை தந்தை என அழைப்பதில்லை, மாறாக அன்னை என்றுதானே அதை அழைக்கின்றோம் என புன்னகையோடு கூறியுள்ளார்.

### Laudato si' உண்மையான சக்தி

ஸ்கோலாஸ் அமைப்பினர், இவ்வுலகில் Laudato si' திருமடலை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்று இளைஞர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த திருத்தந்தை, படைப்பில் நல்லிணக்கத்தைக் கொணர இளையோர் தொடர்ந்து பணியாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நம் பொதுவான இல்லமாகிய இப்பூமிக் கோளத்தைப் பாதுகாப்பதில் பெண்களும், ஸ்கோலாஸ் அமைப்பினரும் மிகவும் சக்திவாய்ந்தவர்களாக உள்ளனர் என்றும், இயற்கையைப் பாதுகாப்பது, படைப்பின் கவிதையைப் பாதுகாப்பதாகும் என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

### 22.05.2022 – ஞாயிற்றுக்கிழமை
முதல் வாசகம் : திப. 15:1-2, 22-29
இரண்டாம் வாசகம் : தி.வெ. 21: 10-14, 22-23
நற்செய்தி வாசகம் : யோவா. 14:23-29

### 23.05.2022 – திங்கள்கிழமை
முதல் வாசகம் : திப. 16 : 11-15
நற்செய்தி வாசகம் : யோவா 15 : 26-16:4

### 24.05.2022 – செவ்வாய்கிழமை
முதல் வாசகம் : திப. 16 : 22-34
நற்செய்தி வாசகம் : யோவா 16 : 5-11

### 25.05.2022 – செவ்வாய்கிழமை
முதல் வாசகம் : திப. 17 : 15, 22 - 18:1
நற்செய்தி வாசகம் : யோவா. 16 : 12-15

### 26.05.2022 – வியாழக்கிழமை
முதல் வாசகம் : திப. 18 : 1-8
நற்செய்தி வாசகம் : யோவா. 16:16-20

### 27.05.2022 – வெள்ளிக்கிழமை
முதல் வாசகம் : திப. 18 : 9-18
நற்செய்தி வாசகம் : யோவா. 16 : 20-23அ

### 28.05.2022 – சனிக்கிழமை
முதல் வாசகம் : திப. 18 : 23-28
நற்செய்தி வாசகம் : யோவா. 16 : 23ஆ-28



"Glory to GOD, who is able to do far beyond all that we could ask or imagine by his power at work within us."

- Ephesians 3:20




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

# தித்திக்கும் திருக்குறள்

**மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.**

அதிகாரம் 14
ஒழுக்கமுடைமை
குறள் – 134

**பொருள் :** தான் கற்ற சாஸ்திரங்களை ஒருவன் மறந்து போனாலும் மீண்டும் படித்து நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் அவனது ஒழுக்கம் ஒருமுறை கெடுமாயின் திரும்பப் பெறமுடியாது. ஒழுக்கக்கேடு பிறவிப் பயனையே ஒழித்துவிடும் என்பது வலியுறுத்தப்பட்டது. ஒழுக்கம் ஒன்றே உயர்வைத் தரும் என்கிறார் வள்ளுவர். ஒவ்வொருவருக்கும் அவரவர் செயல்களுக்கேற்பக் கடவுள் கைம்மாறு செய்வார். மனஉறுதியோடு நற்செயல் புரிந்து மாட்சி, மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடுவோருக்கு அவர் நிலைவாழ்வை வழங்குவார். (உரோமையர் 2:6,7)

தனி மனித ஒழுக்கம் ஒவ்வொரு மனிதர்களுக்கும் மிகவும் அவசியமாகும். ஒழுக்கமில்லாத மனிதர்கள் சமூக மதிப்பு இல்லாதவர்களாக காணப்படுவர். அவர்கள் எவ்வளவு கற்றிருந்தாலும் வீணே.

மனிதர்களுடைய நடத்தைகளில் ஒழுக்கமும், கட்டுப்பாடும் மிக மிக அவசியம். நம்மைச் சுற்றி நிகழ்கின்ற நிகழ்வுகளைக் கண்டு மனம் பல்வேறு கோணங்களில் சிந்திக்கும். சில சமயம் சிந்தனைகளும் தவறான முறையில் பயணிக்கும். இவற்றிலிருந்து மனதைச் சீர்செய்து சரியான பாதையில் பயணிப்பதில்தான் வாழ்வின் ஒழுக்கநெறி அமைந்துள்ளது.

மேலும் தவறான வழிகளில் நடத்தும் மனிதர்களின் வார்த்தைகளைக் கேட்காமல் விலகி இருப்பதும் நன்மையைத் தரும்.

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது.

தீய குணம் உடையவரை காண்பதும் பயனற்ற சொற்களைக் கேட்பதும், தீய குணங்களைப் பேசுவதும், இணக்கமாக அவர்களுடன் நட்பில் கூடியிருப்பதும், தீமையை அதாவது ஒழுக்கக் கேட்டை விளைவிக்கும் என்கிறது மூதுரை.

திரு சட்டங்களை நன்கு கற்றறிந்தும், அதை செயல்படுத்தாமல் ஒழுக்கக்கேடுகளில் நிறைந்திருக்கும் யூதர்களை சாடுகிறார் பவுல்.

யூதர் என்னும் பெயரைத் தாங்கித் திருச்சட்டத்தின் அடிப்படையில் வாழும் நீங்கள் கடவுளோடு கொண்டுள்ள உறவைப்பற்றிப் பெருமைப்படுகிறீர்கள்;

அவருடைய திருவுளத்தை அறிந்திருக்கிறீர்கள்; திருச்சட்டத்தைக் கற்றறிந்துள்ளதால் எது சிறந்தது எனச் சோதித்து அறிகிறீர்கள்.

அறிவையும் உண்மையும் தன்னகத்தே கொண்டுள்ள திருச்சட்டம் உங்களிடம் இருக்கிறது என்னும் உறுதியான நம்பிக்கையில் பார்வையற்றோருக்கு வழிகாட்டியாகவும், இருளில் இருப்போர்க்கு ஒளியாகவும், அறிவிலிகளுக்குக் கல்வி புகட்டுபவராகவும் குழந்தைகளுக்கு ஆசிரியராகவும் இருக்க முற்படுகிறீர்கள்.

ஆனால் பிறருக்குக் கற்றுக்கொடுக்கும் நீங்களே கற்றுக் கொள்ளவில்லையே! திருடாதே

எனப்பறைசாற்றுகிறீர்கள்; நீங்களே திருடுவதில்லையா?

விபசாரம் செய்யாதே எனச் சொல்கிறீர்கள்; நீங்களே விபசாரம் செய்வதில்லையா? தெய்வச் சிலைகளைத் தீட்டாகக் கருதுகிறீர்கள்; நீங்களே அவற்றின் கோவில்களைக் கொள்ளையிடுவதில்லையா?

திருச்சட்டத்தைப் பற்றிப் பெருமைப்படுகிறீர்கள்; நீங்களே அச்சட்டத்தை மீறிக் கடவுளை இழிவுபடுத்துவதில்லையா?

ஆம், மறைநூலில் எழுதியுள்ளவாறு 'உங்களால் கடவுளின் பெயர் பிற இனத்தாரிடையே இகழப்படுகின்றது.' (உரோமையர் 2:17-24) என்று பவுல் தைரியமாக நன்கு கற்றறிந்த யூதர்களின் ஒழுக்கக் கேட்டினை விளக்குகிறார்.

திருச்சட்டங்களையும், வசனங்களையும், சாஸ்திரங்களையும் கற்று மறந்தாலும், மீண்டும் அதைப் படித்து அறிந்து கொள்ளலாம். ஆனால் ஒழுக்கக் கேட்டினால் வரும் இழிவை ஒருபோதும் உலகம் மறவாது. அவர்கள் பெயரும் நிலைத்து நிற்காது. கடவுளின் பெயரும் இகழப்படும்.

எவரொருவர் உயர்வான கொள்கையோடு, விடாமுயற்சி, உண்மை, நேர்மை, விட்டுக்கொடுத்தல், சுறுசுறுப்பு, கடுமையான பயிற்சி, தியாகம் போன்ற உயரிய பண்புகளைக் கொண்டிருக்கிறாரோ அவரே பிறருக்கு நல் வழிகாட்டி என்பதில் ஒரு துளியும் ஐயமில்லை.

'ஐம்புலன் ஆட்சி கொள்' என்பது ஒழுக்கத்தின் இரகசியம். 'நீங்கள் தூய, இறைப்பற்றுள்ள நடத்தையில் மிகவும் சிறந்து விளங்க வேண்டும்!

கடவுளின் நாளை எதிர்பார்த்து அவர் வருகையை விரைவுபடுத்த வேண்டும். அந்நாளில் வானங்கள் எரிந்தழிந்து பஞ்சபூதங்கள் வெந்துருகிப் போகும்.

அவர் வாக்களித்தபடியே நீதி குடிகொண்டிருக்கும் புதிய விண்ணுலகும் புதிய மண்ணுலகும் வரும் என நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அன்பார்ந்தவர்களே, இவற்றை எதிர்பார்த்திருக்கும் உங்களை அவர் மாசுமறுவற்றவர்களாய், நல்லுறவு கொண்டவர்களாய்க் காணும் வகையில் முழுமுயற்சி செய்யுங்கள்.

நம் ஆண்டவரின் பொறுமையை மீட்பு எனக் கருதுங்கள். நம் அன்பார்ந்த சகோதரர் பவுலும் தமக்கு அருளப்பட்ட ஞானத்தின்படி இவ்வாறுதான் உங்களுக்கு எழுதியுள்ளார்.

தம்முடைய திருமுகங்களில் இவை பற்றிப் பேசும் போதெல்லாம் இவ்வாறே அவர் சொல்லுகிறார். அவருடைய திருமுகங்களில் புரிந்துகொள்வதற்குக் கடினமானவை சில உண்டு. கல்வி அறிவில்லாதவர்களும் உறுதியற்றவர்களும் மறைநூலின் மற்றப் பகுதிகளுக்குப் பொருள் திரித்துக் கூறுவதுபோல் இவற்றுக்கும் கூறுகின்றனர்; அதனால் தங்களுக்கே அழிவை வருவித்துக் கொள்கின்றனர்.

அன்பார்ந்தவர்களே, நீங்கள் இவற்றையெல்லாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறீர்கள். கட்டுப்பாடற்றவர்களின் தவறான வழிகளால் கவர்ந்திழுக்கப்பட்டு, உங்கள் உறுதி நிலையினின்று விழுந்துவிடாதபடி கவனமாயிருங்கள்.

நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் அருளிலும் அறிவிலும் வளர்ச்சி அடையுங்கள். அவருக்கே இன்றும் என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்'.

மனிதர்களாகிய பிறந்தவர்களுக்கு பாவம் இராமல் இராது. பாவச் சோதனைகளும் வராமல் இருக்காது. கண்டிப்பாக வரும். ஆனால் அதற்கு நாம் காரணமாகி விடக்கூடாது.

இயேசு தாமே சோதனைக்கு உள்ளாகித் துன்பப்பட்டதனால் சோதிக்கப்படுவோருக்கு உதவி செய்ய அவர்வல்லவர். (எபிரேயர் 2:18)

நிலை தடுமாறும் சமயங்களில் நாம் உடனே ஆண்டவரிடம் தஞ்சம் புக வேண்டும் என்பதை இந்த வசனம் நமக்கு அறிவுறுத்துகிறது. மேலும்

உங்கள் மனம் ஆர்வம் உடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்' என்றார். (மாற்கு நற்செய்தி 14:38)

பாவங்களிலிருந்து மீட்பவரும், பாவ சோதனைகளிலிருந்து காப்பாற்றுகிற வரும் ஆகிய கடவுளிடம் தஞ்சம் புகுந்து சாட்சியாக வாழ்வோம்.

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் பழப்போம்...